Matric - July - 2007

# 7901

Register Number | | | | | |

## தமிழ் — முதல் தாள்

### ( செய்யுள், உரைநடை )

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் III க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஏழனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. $7 \times 2 = 14$

1. திரு.வி.க. அவர்கள் படைத்த நூல்களுள் நான்கினைக் கூறுக.
2. ஒருவனுக்கு நிலைத்த உடைமை எது ? ஏன் ?
3. எதனைக் கரத்தல் கூடாது ?
4. யூதர்கள் சிலுவை மிசை எழுதியது யாது ?
5. பாடாண் திணையை விளக்குக.
6. பாணன் எங்கு பாடினான் ? எவ்வளவு நேரம் பாடினான் ?
7. குறுமுனிக்கு அச்சம் பிறக்கக் காரணம் யாது ?
8. பிளந்தார், அளந்தார் - எவற்றை ?
9. திருப்பாமாலை - பெயர்க்காரணம் கூறுக.

II. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக. $5 \times 4 = 20$

10. நாமக்கல் கவிஞர் தமிழை எவ்வாறு வாழ்த்துகிறார் ?
11. சினங்கொள்வார்க்கு வரும் தீங்கினை விளக்குக.
12. புகார் நகரத்தின் சிறப்புகளை விளக்குக.
13. 'யாதைச் சாற்றுகேன்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
14. கழுமல வளநகர்ப் பெருந்தகையை ஞானசம்பந்தர் எங்ஙனம் போற்றுகிறார் ?
15. பாரத நாட்டை 'ஒளிர்தரு நாடு' எனப் பாரதியார் கூறக் காரணங்கள் யாவை ?
16. குறுந்தொகையில் தோழி கூறுவன யாவை ?

[ Turn over

III. 17. 'பேண......' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. 4

18. 'ஆக்கம்......' எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக. 2

19. 'அரிது' என முடியும் குறட்பாவை எழுதுக. 2

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக : 1 × 8 = 8

20. 'வெகுளாமை' பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

21. சிலப்பதிகார வாழ்த்தின் சீர்மையை எழுதுக.

22. 'அந்தரத்தில் மேடை அமைத்தார்' என்ற தலைப்பில் உள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

V. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக :

23. பொருத்துக : 4 × 1 = 4

| | | |
|---|---|---|
| அ) பாண்டிய நாடு | — | வஞ்சி |
| ஆ) சோழ நாடு | — | காஞ்சி |
| இ) சேர நாடு | — | புகார் |
| ஈ) தொண்டை நாடு | — | மதுரை |
| | — | நெல்லை. |

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க : 6 × 1 = 6

24. திரிகடுகம் ................ அமைந்த நூல்.

அ) வெண்பாக்களால் ஆ) ஆசிரியப்பாக்களால் இ) கலிப்பாக்களால்.

25. கம்பராமாயணத்திலுள்ள காண்டங்கள்

அ) ஐந்து ஆ) மூன்று இ) ஆறு.

26. வள்ளத்தோள் பாடலை மொழிபெயர்த்தவர்

அ) கவிமணி ஆ) காமராசன் இ) துறைவன்.

27. கந்தர் கலிவெண்பாவை இயற்றியவர்

அ) குமரகுருபரர் ஆ) திரிகூடராசப்பர் இ) கச்சியப்பர்.

28. தமிழ்வேந்தர் வெளியிட்ட சின்னக்காசு

அ) நிலவு ஆ) விண்மீன் இ) செங்கதிரோன்.

29. பாரத நாடு பாருக்கெல்லாம் திலகம் என்றவர்

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) வாணிதாசன்.

VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. 5 × 2 = 10

30. செல்வர்கள் ஔவையாரிடம் வேண்டியது என்ன ?

31. வாலை வாரிதி எத்தகு சிறப்புக்குரியவன் ?

32. வீடும், குடும்பமும் எவற்றிற்கு ஆதாரமாயிருந்து வந்தன ?

33. சாத்தனார் சொல்லுகின்ற பளிக்கறை மண்டபத்தின் சிறப்பு யாது ?

34. காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கத்தை ஈ.வெ.ரா. எவ்வாறு ஏற்று நடத்தினார் ?

35. செய்ந்நன்றி மறவாமைக்கு வ.உ.சி. எடுத்துக்காட்டும் திருக்குறள் யாது ?

36. செம்மறி ஆட்டை உவமையாகக் கொண்டு டாக்டர் மு.வ. கூறும் கருத்து யாது ?

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **நான்கனுக்கு** ஒவ்வொன்றிற்கும் *ஆறு* வரிகளில் விடை எழுதுக. 4 × 4 = 16

37. இந்திய நாட்டின் இயற்கைத் தாது, கனிம வளம் பற்றி விளக்குக.

38. 'வாழ்வு சார் கல்வி' பற்றித் திரு.வி.க. யாது கூறுகிறார் ?

39. வண்ணம் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

40. எவற்றை மேன்மேலும் படிக்க வேண்டும் என டாக்டர் மு.வ. விரும்புகிறார் ?

41. 'வாலஸ்' என்பவர் யார் ? அவருக்கும் சிதம்பரனாருக்கும் இருந்த தொடர்பினை விளக்குக.

42. இந்தியாவின் தனி நோய் எது ? அதன் கோர வடிவத்தை நெ.து.சு. எவ்வாறு விளக்குகிறார் ?

VIII. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக. 1 × 8 = 8

43. 'தாய்மொழியிலேயே கல்வி பெறலாம்' என்பதைத் திரு.வி.க. எவ்வாறு நிறுவுகிறார் ?

44. 'பெரியாரின் மதுவிலக்குத் தொண்டு' பற்றித் தொகுத்து எழுதுக.

45. 'மனையியலும் கல்வியும் ஒன்றே' - விளக்குக.

[ Turn over

IX. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க : 4 × 1 = 4

46. 2010 ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே இந்தியாவிலிருந்து ஒழிக்கப்பட வேண்டியது

அ) கல்லாமை

ஆ) வறுமை

இ) வேலையில்லாத் திண்டாட்டம்.

47. ஒரு துறைக்கோவை என்பது

அ) அகத்துறை சிற்றிலக்கியம்

ஆ) அந்தாதி

இ) சிலேடை.

48. கபிலர் கண்ட அறிவியல் உண்மையை உணர்த்தும் பாடல் அமைந்த தொகுப்பு

அ) திருவள்ளுவமாலை

ஆ) புறப்பொருள் வெண்பாமாலை

இ) பெண்மதிமாலை

49. உமறுப் புலவரைப் போற்றிப் பாதுகாக்க முன்வந்த புரவலர்

அ) வாலை வாரிதி

ஆ) அபுல் காசீம் மரைக்காயர்

இ) உசேன் நயினார்.

X. கீழ்க்காணும் சொற்களுள் எவையேனும் **இரண்டினை** மட்டும் வாக்கியத்தில் அமைத்து எழுதுக. 2 × 1 = 2

50. அ) தொன்று தொட்டு

ஆ) மட்டற்ற

இ) ஒன்றோடொன்று.